ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2341/50 - 2023 ජූලි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.07.20

*2341/50 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2023 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் (திருத்தம்) சட்டம்***

*பிரிவு 5 இன் உப பிரிவு (3) இன் கீழான கட்டளை*

*2023 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல் (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 5 இன் உப பிரிவு (3) இன் மூலம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆகிய நான், அட்டவணையின் நிரல் II இல் குறித்துரைக்கப்பட்ட பொறுப்பின் வரையறைகள், அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்புரைகளின் நோக்கங்களுக்கான பொறுப்பின் வரையறைகளாக, சர்வதேச போக்குவரத்து அல்லாத வான்வழிப் போக்குவரத்துக்குப் பொருந்தும் வகையில் இருக்க வேண்டும் என இக்கட்டளை மூலம் குறித்துரைக்கின்றேன்.*

**நிமல் சிறிபால டி சில்வா,**
துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும்
விமானப் போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூலை 20.*

**அட்டவணை**

| இல. | நிரல் I<br>உறுப்புரை | | நிரல் II<br>பொறுப்பில் வரையறைகள் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|
| 1. | உறுப்புரை 21 - | பயணிக்கு மரணம் அல்லது ஊறுபாடு ஏற்படும் விடயத்தில் | ஒவ்வொரு பயணிக்கும் 5,000,000 |
| 2. | உறுப்புரை 22 - பந்தி 1 | ஆட்களை ஏற்றிச் செல்வதிலான தாமதத்தினால் விளைவிக்கப்பட்ட சேதத்தின் விடயத்தில் | ஒவ்வொரு பயணிக்கும் 10,000 |
| 3. | உறுப்புரை 22 - பந்தி 2 | பயணப் பொதிகளை ஏற்றிச் செல்வதிலான அழிவு, இழப்பு, சேதம் அல்லது தாமதத்தின் விடயத்தில் | ஒவ்வொரு பயணிக்கும் 5,000 |
| 4. | உறுப்புரை 22 - பந்தி 3 | சரக்கை ஏற்றிச் செல்வதிலான அழிவு, இழப்பு, சேதம் அல்லது தாமதத்தின் விடயத்தில் | ஒரு கிலோ கிராமுக்கு 100 |

EOG 07 - 0193

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.